Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    புரட்டாதி 30    [16-10-1993]    சனிக்கிழமை    ஓசை 240

## முப்பது பாடசாலைகளுக்கு ஒரு முதன்மை ஆசிரியர் நியமனம்

புதிதாக செயற்படும் பதினான்கு கல்விக் கோட்டங்களுக்கும் தற்போது ஆசிரிய ஆலோசகர்களாக கடமையாற்றுபவர்கள் இடமாற்றம் செய்யப்பட உள்ளார்கள். இவர்களுடைய பெயர் முதன்மை ஆசிரியர்கள் என மாற்றம் செய்யப்படும். முப்பது பாடசாலைகளுக்கு ஒரு முதன்மை ஆசிரியர் ஒரு பாடத்துக்கென இடமாற்றப்படுவர். இதேசமயம் ஒரு கோட்டக்கல்வி நிலையத்தில் முதன்மை ஆசிரியர்க்குரிய பாடசாலைகள் குறைவாக இருந்தால் அடுத்த கோட்டப் பாடசாலைகளுக்கு அவருடைய சேவை இணைப்புச் செய்யப்படும் என்று யாழ். கல்வித்திணைக்கள ஆசிரிய ஆலோசகர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சிவானந்தன் கடந்த புதன்கிழமை யாழ். கல்வித் திணைக்கள மகாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில்

(3ஆம்பக்கம் பார்க்க)

# வடக்கில் புதிய தாக்குதல் திட்டம்; ராணுவம் தயாராகி வருகின்றது

## பிரதான நகரை பிடிப்பது நோக்கமாம்

[கொழும்பு]

**வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதான நகரம் ஒன்றைக் கைப்பற்றும் நோக்கத்துடன் புதியராணுவ நடவடிக்கையொன்றை மேற்கொள்ள ராணுவ உயர்பீடம் திட்டமிட்டு வருகின்றது. சிறிலங்காவின் முப்படைகளையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலரின் ஆலோசனையுடன் இத்தாக்குதலுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.**

இராணுவ உயர்வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் மேலும் தெரிவித்ததாவது; யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது பெறப்பட்ட அனுபவங்களை விசேட கவனத்திற் கொண்டு இத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நடவடிக்கைக்கு தேவையான மேலதிக படையினரை பெற்றுக்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கில் யுத்தம் பற்றிய தீர்மானங்களை எடுப்பதற்கு முப்படைத் தளபதிகளுக்கும், கள அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சிறிலங்காபிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இத்தீர்மானத்தின்படி எதிர்காலத்தில் கள அதிகாரிகளின் அபிப்பிராயத்திற்கேற்ப முப்படைத் தளபதிகளும் யுத்தத்திற்கான திட்டங்களை பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவிற்கு தெரிவிப்பர் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

## வெடி விபத்தில் வீரச்சாவு



லெப்டினன்ட் வெற்றிகொண்டான்

(யாழ்ப்பாணம்)

யாழ். பளைப்பகுதியில் கடந்த 14ம் திகதி நடந்த வெடி விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் வெற்றி கொண்டான் [அந்தோனிப்பிள்ளை அன்ரன் 10-ம்வட்டாரம் நெடுந்தீவு.] இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## யாழ். மீதான பாரிய நடவடிக்கை; புத்தாண்டில் எடுக்கப்படலாம்

### லண்டன் பினான்சியல் ரைம்ஸ் தெரிவிப்பு

எதிர்வரும் புத்தாண்டில் யாழ்ப்பாணம் மீதான பாரிய இராணுவ நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்படலாம் என 'த பினான்சியல் ரைம்ஸில்' றிச்சார்ட் கூப்பர் எழுதியுள்ளார். ஆனால் அப்படி ஒரு இராணுவ நடவடிக்கை எடுத்தால் அதற்குக்கொடுக்க வேண்டிய விலை தாங்க முடியாத அளவிற்கு இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் குறித்து சிறிலங்காஇராணுவம் கொண்டுள்ள நோக்கம் பற்றி றிச்சேட் கூப்பர் எழுதியுள்ள கட்டுரையில்.

ஆறு லட்சம் தமிழ் மக்கள் வாழும் தமிழரின் தாயகமான யாழ்ப்பாணத்தின்மீது எந்தத் திகதியில் எப்போது முக்கியமான நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பது பற்றி இராணுவம் இன்னமும் வாய் திறக்கவில்லை என்றாலும் வரும் புத்தாண்டில் யாழ்ப்பாணத்தின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படக்கூடும் என்று சூசகமாக எழுதியுள்ளார்.

சிறிலங்கா இராணுவம்

## வடமராட்சி கடற்பரப்பில் மீனவர் மீது தாக்குதல்

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினர் நேற்றுக்காலை வடமராட்சிக் கடற்பரப்பில் மீனவர்கள் மீதும்கரையோரக் குடியிருப்புகள் மீதும் பலத்த கலிபர், ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

காங்கேசன்துறையை நோக்

## கடற்படை அதிகாரி கொலை; நயினாதீவு பிக்கு கைது

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகவிகாரையில் இருந்த புத்தபிக்கு ஒருவர் கடற்படை அதிகாரி ஒருவரின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சில வருடங்களுக்கு முன் கொலையுண்ட கடற்படை உயரதிகாரி ரஞ்சித் என்பவரின் கொலைக்கு இவர் உடந்தையாகஇருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## ரணிலின் பாதுகாப்பிற்கு ஸ்கொட்லண்ட்யார்ட்

(லண்டன்)

லண்டன் வழியாக வாஷிங்டனுக்கு பயணம் செய்த சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு லண்டனில் பலத்தபாதுகாப்பை ஸ்கொட்லண்ட்யார்ட்பொலிசார்வழங்கியதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

லண்டன் கீத்றோ விமான நிலையத்தில் ரணில் விக்கிரமசிங்க தரித்து நின்றபோது எவரும் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. வாஷிங்டனில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்களின் மகாநாட்டில்கலந்து கொள்ள ரணில் விக்கிரமசிங்க சென்றபோதே அவர் லண்டனில் தரித்து நின்றார்.

## யுத்தம்பற்றி தவறான செய்தி சிங்களமக்கள் அறிகின்றனர்

### "ராவய" பத்திரிகையாளர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு பற்றிய தவறான செய்திகளை சிங்கள மக்கள் மத்தியில் சிறிலங்கா அரசு பரப்பி வருகின்றது. தமது தாக்குதல்களால் விடுதலைப் புலிகள் இறப்பதாக சிறிலங்கா அரசு கூறுகின்றது. ஆனால் நாளாந்தம் பொது மக்கள் இறப்பதனை நேரில் காணக்கூடியதாகவுள்ளது என யாழ் நகர் வந்து திரும்பிய 'ராவய' பத்திரிகையாளர் புலிகளின் குரலுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர்கள் மேலும்தெரிவிக்கையில் நாசம் விளைவிக்கும் இந்த யுத்தம்

(3ஆம் பக்கம் பார்க்க)

## 'விடுதலைப்புலிகள்' ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் குரல் - 43வது [புரட்டாதி- ஐப்பசி] இதழ் நாளை வெளி வருகின்றது

'கடற்புலிகள்' சிறப்பிதழாக அமைந்துள்ள இவ் இதழ் 'தமிழீழ மக்கள் மீது சிங்கள அரசு போர்ப்பிரகடனம்' என்ற தலைப்புச் செய்தியை வழி தனியரசு தான்' என்ற கருத்துரையையும் கொண்டுள்ளது.

'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' என்ற விளக்கவுரையும், 'கடற்புலிகளின் வளர்ச்சியும் - போரில் திருப்புமுனையும்', 'மூழ்கடிக்கப்பட்ட மிதக்கும் மினிமுகாம்' 'சிங்களக் கடற்படையின்

ஏஜென்சி செய்திகள் மேலும் தெரிவித்ததாவது; யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது பெறப்பட்ட அனுபவங்களை விசேட கவனத்திற் கொண்டு இத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நடவடிக்கைக்கு தேவையான மேலதிக படையினரை பெற்றுக்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கில் யுத்தம் பற்றிய தீர்மானங்களை எடுப்பதற்கு முப்படைத் தளபதிகளுக்கும், கள அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்குவ

ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கள அதிகாரிகளின் அபிப்பிராயத்திற்கேற்ப முப்படைத் தளபதிகளும் யுத்

பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவிற்கு தெரிவிப்பர் என பிரதமர் தெரிவித்துள்ளார்.



லெப்டினன்ட் வெற்றிகொண்டான்

(யாழ்ப்பாணம்)

யாழ். பளைப்பகுதியில் கடந்த 14 ம் திகதி நடந்த வெடிவிபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் வெற்றி கொண்டான் [அந்தோனிப்பிள்ளை அன்ரன் 10-ம்வட்டாரம் நெடுந்தீவு.] இவருக்கு விடுதலை புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# யாழ். மீதான பாரிய நடவடிக்கை; புத்தாண்டில் எடுக்கப்படலாம்

## லண்டன் பினான்சியல் ரைம்ஸ் தெரிவிப்பு

எதிர்வரும் புத்தாண்டில் யாழ்ப்பாணம் மீதான பாரிய இராணுவ நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்படலாம் என 'த பினான்சியல் ரைம்ஸில்' றிச்சார்ட் கூப்பர் எழுதியுள்ளார்- ஆனால் அப்படி ஒரு இராணுவ நடவடிக்கை எடுத்தால் அதற்குக்கொடுக்க வேண்டிய விலை தாங்க முடியாத அளவிற்கு இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் குறித்து சிறிலங்காஇராணுவம் கொண்டுள்ள நோக்கம் பற்றி றிச்சேட் கூப்பர் எழுதியுள்ள கட்டுரையில்.

ஆறு லட்சம் தமிழ் மக்கள் வாழும் தமிழரின் தாயகமான யாழ்ப்பாணத்தின்மீது எந்தத் திகதியில் எபபோது முக்கியமான நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பது பற்றி இராணுவம் இன்னமும் வாய் திறக்கவில்லை என்றாலும் வரும் புத்தாண்டில் யாழ்ப்பாணத்தின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படக்கூடும் என்று சூசகமாக எழுதியுள்ளார்.

சிறிலங்கா இராணுவம் படையில் பத்தாயிரம் பேரை புதிதாகச் சேர்த்துப் பயிற்சி

(3ஆம் பக்கம் பார்க்க)

## "ராவய" பத்திரிகையாளர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு பற்றிய தவறான செய்திகளை சிங்கள மக்கள் மத்தியில் சிறிலங்கா அரசு பரப்பி வருகின்றது. தமது தாக்குதல்களால் விடுதலைப் புலிகள் இறப்பதாக சிறிலங்கா அரசு கூறுகின்றது. ஆனால் நாளாந்தம் பொது மக்கள் இறப்பதனை நேரில் காணக்கூடியதாகவுள்ளது என யாழ் நகர் வந்து திரும்பிய 'ராவய' பத்திரிகையாளர் புலிகளின் குரலுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர்கள் மேலும்தெரிவிக்கையில் நாசம் விளைவிக்கும் இந்த யுத்தம்

(3ஆம் பக்சம் பார்க்க)

## வடமராட்சி கடற்பரப்பில் மீனவர் மீது தாக்குதல்

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினர் நேற்றுக்காலை வடமராட்சிக் கடற்பரப்பில் மீனவர்கள் மீதும்கரையோரக் குடியிருப்புகள் மீதும் பலத்த கலிபர், ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

காங்கேசன்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த இப்படையினர் முனை, இன்பருட்டி, சற்கோட்டை, தொண்டமனாறு பகுதிகளில் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது கடலில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்கள் ஒருவாறு கடலில் குதித்து கரைக்கு வந்து சேர்ந்தனர் பாரிய சேதங்கள் பற்றி தகவல் இல்லை.

(யோ)

## பரீட்சை ரத்து

(நமது நிருபர்)

இலங்கை திட்டமிடல் சேவையின் வினைத்திறமை காண் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபர் அனுப்பிய செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## 'விடுதலைப்புலிகள்' ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் குரல் - 43வது [புரட்டாதி- ஐப்பசி] இதழ் நாளை வெளி வருகின்றது

'கடற்புலிகள்' சிறப்பிதழாக அமைந்துள்ள இவ் இதழ் 'தமிழீழ மக்கள் மீது சிங்கள அரசு போர்ப்பிரகடனம்' என்ற தலைப்புச் செய்தியையும், புலிகளின் குரலாக- 'தமிழினத்திற்கு உள்ள ஒரே வழி தனியரசு தான்' என்ற கருத்துரையையும் கொண்டுள்ளது.

'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' என்ற விளக்கவுரையும், 'கடற்புலிகளின் வளர்ச்சியும் - போரில் திருப்புமுனையும்', 'மூழ்கடிக்கப்பட்ட மிதக்கும் மினிமுகாம்' 'சிங்களக் கடற்படையின் பலம்' ஆகிய தலைப்புகளிலான கட்டுரைகளுடன், கரும்

(3ஆம் பக்கம் பார்க்க)

## பொது எழுதுநர் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்தவும்

### -அ. எ. சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க மாகாண சேவையின் பொது எழுதுநர் சேவையின் II-ம் வகுப்பின் 'அ' பிரிவிற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சையை இம்முறையும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு யாழ்ப்பாண கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென யாழ். மாவட்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டில் இப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டதை சுட்டிக் காட்டி அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கல்விப் பணிப் பாளருக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் கிளாலி கடல் பயண ஆபத்து பற்றியும் கொழும்பில் தமிழர்கள் கைதாவது குறித்தும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## கொலரா நோயாளிகள் 16பேர் நேற்று அனுமதி

கொலரா நோயால் பீடிக்கப்பட்டவர்களென சந்தேகிக்கப்படும் 16 நோயாளிகள் நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய்க்கிலக்காவோரின் எண்ணிக்கை சில நாட்களாக குறைந்து கொண்டு வந்து மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(சி)

# கைதிகளின் பெற்றோர் உண்ணாவிரதம் இருப்பர்

## திவயின பத்திரிகையில் தகவல்

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப்புலிகளினால் சிறை பிடிக்கப்பட்டுள்ள பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் விடுதலைக்கு அரசாங்கம் எந்த ஒருமுயற்சியையும்மேற்கொள்ளாது தொடர்ந்து மௌனம் சாதித்து வந்தால்இவர்களின் விடுதலையை நோக்கி இவர்களின்பெற்றோர், உறவினர் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க உள்ளதாக சிறைக்கைதியான அனுர விஜே பண்டாரவின் தந்தை ஜீ செல்ல பண்டார ''திவயின'' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிராகவும் தனிநாடு ஒன்றை உருவாக்க இடம் கொடுக்காத பணியிலே எமது பிள்ளைகள் பிடிபட்டார்கள் எனவே அரசாங்கம் இவர்களை விடுவிக்க தவறிவிட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமும் முயற்சியை மேற்கொண்டோம். இவையும் பயன்தரவில்லை. எனவே தான் நாம் இந்த முடிவை எடுக்கவேண்டி வந்துள்ளது.

எமது பிள்ளைகளின் விடுதலையை விடவும், தமிழர் பிரச்சினையை விடவும் ஜனாதிபதிக்கு ''கிரிக்கட்'' விளையாட்டு முக்கியமாகியுள்ளது. எனவே அரசினால் இவர்கள் விடுதலைக்காக எதுவும் செய்வார்கள் என்ற நம்பிக்கை முற்றாக அற்று போய்விட்டது. எனவே தான் இந்த முடிவுக்கு வந்துள்ளோம்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## புகைப்படக் கண்காட்சி மானிப்பாயில் ஆரம்பம்

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றுச் சம்பவங்களைச் சித்தரிக்கும் மாபெரும் புகைப்படக் கண்காட்சி இன்று காலையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் திறந்து வைக்கப்படவுள்ளது. வலிகாமம் பிரிவு மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி எழிற்கொடி தலைமையில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு ப தமிழ்ச்செல்வன் அவர்களால் திறந்து வைக்கப்பட இருக்கும் இக் கண்காட்சியில் பேரினவாதத்தின் இன அழிப்பு நடவடிக்கைகள், அரசின் திட்டமிட்ட கல்வி அழிப்பு நடவடிக்கைகள், தமிழீழ மக்களின் எழுச்சிக்கு சான்றான நடவடிக்கைகள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றமும், போர்ப் பயிற்சியும், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகள், பெண்புலிகளின் சாதனைகள், கடற் புலிகளின் சாதனைகள் உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பேரணிகள், தியாகி

(3ஆம் பக்கம் பார்க்க)

## வாந்திபேதி விடுதி இடமாற்றம் செய்யப்பட்டது

யாழ். போதனா மருத்துவமனையின் வாந்திபேதி நோயாளிகளுக்கான விடுதி இடமாற்றப்பட்டுள்ளது. நோயாளர் நலன்புரிச் சங்கத்துக்கு அண்மையில் இயங்கி வந்த ஆண்களுக்கான வாந்திபேதி நோயாளர் விடுதியே இடமாற்றப்பட்டுள்ளது.

தற்பொழுது பதினைந்தாம் இலக்க நோயாளர் விடுதி வாந்திபேதி நோயாளர் விடுதியாக மாற்றப்பட்டிருக்கிறது.

(சி) (நி)

## பண்டாரிகுளம் பகுதி படையினரால்சுற்றிவளைப்பு

(வவுனியா)

வவுனியா பண்டாரிகுளம் கிராமம் சிறிலங்கா படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. அடைமழையின் மத்தியில் பண்டாரிகுள மக்களை அதிகாலை வேளையில் புகுந்த படையினர் அவர்களை வீடுகளை விட்டு வெளியேற்றினர்.

நேற்று முன்தினம் அதிகாலை 4 30 மணியளவில நடைபெற்ற இச்சுற்றிவளைப் பின்போது மககளை வெளியேற்றிய படையினர்வீடுகளுக்குள் புகுந்து சோதனையிட்டனர். இதன்போது இம்மக்கள் முகமூடிகள் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். இதன் போது பலர் கைதாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

# இனப்பிரச்சினை பேச்சு மூலம் தீர்க்கப்படாவிடின் அழிவு நிச்சயம்

## - திருமதி சிறிமாவோ

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உள்ள பிரச்சினைக்கு யுத்தத்தினால் வெற்றி கொள்ள முடியாது. அப்படி யுத்தத்தினால்வெற்றி கொள்ள நினைத்தால் அப்பாவி இராணுவத்தினரும் பொலிசாரும் ஏனைய பாதுகாப்பு படையினரினதும் உயிர்களை இழக்க வேண்டி வருமே தவிர வெற்றிகொள்ள முடியாது. இவ்வாறு எதிர்க்கட்சி தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தொயியக்க நகரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு யுத்தம் அதிகரித்தே செல்கின்றது. அதனை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கம் கிடையாது போலத்தான் தெரிகின்றது. சிலர் யுத்தத்தை பயன்படுத்தி கோடீஸ்வரர்களாக ஆகியுள்ளனர். சிலர் யுத்தத்தை கறுப்புச்சந்தை வியாபாரமாக்கியும் தரகர் போன்று செயலாற்றி பணம் சம்பாதிக்

(3ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணிகள் சந்திப்பு

சட்டத்தரணிகள், உறுதி எழுதும் நொத்தாரிஸ் ஆகியோர்களுக்கான முக்கிய சந்திப்பு எதிர்வரும் 20-ம் திகதி காலை10. 00மணிக்கு கோண்டாவில் யாழ்மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து சட்டத்தரணிகளையும், நொத்தாரிஸ்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

# தற்கொலைப் படையினர் அங்கி; சந்தேகத்தில் ஒருவர் கைது

## பத்து அங்கிகள் கொழும்பிலாம்

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரத்தில் கடற்கரை ஓரமாகக் கண்டுபிடிக்கப்பட்ட தற்கொலைப் படையினரின் அங்கி தொடர்பாக றெம்யூஸ்பெர்னாண்டோ என்பவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வெடி குண்டு அங்கி போல மேலும் பத்து அங்கிகள் கொழும்புக்குள் அவரால் கொண்டுவரப்பட்டதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

முகத்துவாரம் புனிதஜேம்ஸ் வீதியிலுள்ள சேரி வீடொன்றில் இவர் கைது செய்யப்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### அநுமதிப் பரீட்சை (ஆண்டு 6)

ஆண்டு 5 மாணவருக்கு பிரபல பாடசாலைக்கான மாதிரி அநுமதிப் பரீட்சை 17-10-93 ஞாயிறு மு. ப. 8.00, மு. ப. 11.00 நடைபெறும் மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6282)

### மிருதங்கம்

இரண்டுநாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டு தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(6278)

### தவறிவிட்டது

1740 ரூபா பெறுமதியான வைப்புச் சான்றிதழ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். Mr. Arumuham Kareshamoorthy, Arulmani Bakery, Pidariyamman Koviladv, Kokuvil West, Kokuvil. F-D No. 93 J 2899. B-r No, 166349. (6289)

கடந்த வாரம் சாவகச்சேரிக்கும் கச்சாய் அம்மன் கோவிலுக்கும் இடையில் (லான்ட் மாஸ்டர்) இரு சக்கர உழவு இயந்திரத்தின் இயக்கும் கருவி (சாவி) ஒன்று தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் கோகிலா தேநீர் சாலை, கொடிகாமம் அல்லது இ. முத்துலிங்கம் கெற்பலி. (சி-7712)

### உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி 7570)

### திருமண சேவை

எம்மிடம் பொருத்தமான மணமகன் / மணமகள் உண்டு.

## கோப்ரல் சுட்டுக்கொலை

இராணுவ முகாமிலிருந்து திருடப்பட்ட ரி.56 ரகத் துப்பாக்கியுடன் முகாமை விட்டு வெளியேற முயன்ற இராணுவ கோப்ரல் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் பனாகொட முகாமில் இடம்பெற்றுள்ளது. இதில் துல்கிரியா பகுதியைச் சேர்ந்த கோப்ரல் ஆர். ஏ சந்திரபாலா என்பவர் கொல்லப்பட்டுள்ளார்

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயக மண்ணில்
05-07-1962

தாயக விடிவில்
16 10 1987

### வீரவேங்கை கணேஷ்
**(கைலாயநாதன் கணேசவேல்)**

கல்லுண்டாய் தனில் இந்திய இராணுவம்
கதிகலங்கி சிதறி மடிந்திட களம் குதித்தாய்
எம் இனத்தின் விடிவிற்காய்
உன்னையே அர்ப்பணித்தாய் கணேஷா.

நவாலி வீதி.
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர், நண்பர்கள்.
(6288)

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 03 — 04 — 1951

மறைவு- 19 — 09 — 1990

அமரர்

### நடராசா ஞானசேகரம்
**(கொண்டா)**

**திதி: 16-10-93**

ஆண்டுகள் மூன்று ஆனாலும் எங்கள் உள்ளங்களில் நீங்காத இடம் கொண்ட உங்களை நாம் என்றும் நினைவு கூருகின்றோம்.

அரியாலை கிழக்கு,
அரியாலை.

உங்களைப் பிரிந்து துயருறும்
மனைவி, மக்கள், தாய்,
சகோதர, சகோதரியர்.

(6298)

## முக்கிய அறிவித்தல்

**புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்**

### கிளைக்குழுத் தேர்தல். 1993

ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் பின்வரும் திகதிகளில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

**23. 10. 1993 சனிக்கிழமை:**
**நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல்.**

**30. 10. 1993 சனிக்கிழமை: தேர்தல்.**

14. 10. 1993
(சி 7711)

(நா. தவநாதன்)
தேர்தல் உத்தியோகத்தர்

## நினைவு கூருகின்றோம்...
## 1993-10-16

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - தன்னாமுனைப் பகுதியில் இந்தியப் படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். விஜய்** [ஆறுமுகம் சிவம் - ஆறுமுகத்தான்குடியிருப்பு - மட்டு]

யாழ் - கொக்குவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மேஜ அசோக்** [சோதிலிங்கம் விஜயகுமார் - ஞான தொனி, நெடியகாடு - வல்வெட்டித்துறை]

யாழ் - கல்லுண்டாய் வெளியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். முத்து** [அருச்சுனன் ஜெயக்குமார் - கனகசபை வீதி, மானிப்பாய் - யாழ்]

**கணேஷ்** [கைலாயநாதன் கணேசவேல் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை - யாழ்]

மட்டு நகரில் இந்தியப் படையினரால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழிளைஞன், மற்றும் உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

யாழ் - கோண்டாவில் வடக்கு, கலைவாணி வீதி, இ. போ. ச. சாலைப் பணிமனை பகுதிகளில் இந்தியப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின்போது கொல்லப்பட்ட தம்பதிகளான இளைப்பாறிய நீர்ப்பாசன அதிகாரி, இளைப்பாறிய ஆசிரியை, இவர்களின் மகனான பல்கலைக்கழக வைத்தியபீட மாணவன், மற்றும் இரு மாணவிகள் உட்பட 52 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அம்பாறை - கல்முனை, நற்பிட்டிமுனைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கிருபை** [கணபதிப்பிள்ளை கிருபைராசா - கரடியனாறு - மட்டு]

கிளிநொச்சி - தர்மபுரம் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கடாபி** (இராமலிங்கம் இரவீந்திரன் - இல. 254, தர்மபுரம், பரந்தன் - கிளிநொச்சி)

மட்டு - பெரியகல்லாறுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1989ஆம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோதிகளால்

## வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்
## நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடம்

உதை பந்தாட்டத்தில் இடைவரவு விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1993 நவம்பர் 18ஆம்திகதி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

கொடுப்பனவு விகிதம்:
மணித்தியாலத்திற்கு 75/- ரூபா
(மாதமொன்றிற்கான உச்ச அளவு 900/- ரூபா)

படைக்கவும். தருந்த சன்மானம் வழங்கப்படும் கோகிலா தேநீர் சாலை, கொடிகாமம் அல்லது இ. முத்துலிங்கம் கெற்பலி. (சி-7712)

## உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி 7570)

## திருமண சேவை

எம்மிடம் பொருத்தமான மணமகன்/மணமகள் உண்டு. தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். சந்திப்பு ஞாயிறு காலை. (6300)

## கலையரங்கு திறப்புவிழா

கைதடி மேற்கு சரஸ்வதி சன சமூக நிலையத்தினரின் கலையரங்கு திறப்பு விழா இன்று பிற்பகல் ஐந்து மணியளவில் திரு பூ.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில் ''கிராமத்துக் குரல்'' வெளியீடு, கலைஞர்கள் கௌரவிப்பு, பாராட்டுரை, ஆசியுரை என்பவற்றுடன் பட்டிமன்றம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## பரீட்சைகள்

இலங்கை நிருவாக சேவை 11ஆம் வகுப்புப் பரீட்சை இன்று கொழும்பில் நடத்தப்படும் சிற்றூழியர்களைப் பதவியேற்றுவதற்கான பரீட்சை 1993-10 22ம், 23 ஆம் தேதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தற்போது யாழ்ப்பாணம் இந்துக்கலூரி நிலையத்தில் தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி இறுதி நெறியைப் பயில்பவர்களுக்கான இறுதிப் பரீட்சை 1993 10 22ஆந் தேதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும்.

## அங்குரார்ப்பணம்

கடலாவில் வதியும் வல்வை மக்களால் உருவாக்கப்பட்டு செயற்பட்டுவரும் வல்லை நலன்புரிச்சங்கம் ஆதிகோவிலடி கிராமத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் கடலில் காணாமல் போன பிரதான உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களிற்கான புனர்வாழ்வுத் திட்டம் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆதிசக்தி படிப்பகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. வல்வெட்டித்துறை ஆதிசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

---



**இடம்: செல். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்** **காலம்: 16.10.93 [இன்று]**

**நேரம்: இரவு 6.00 மணி**

## நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் ''வீரதீரச் செயல்கள்'' முதல்முறையாக யாழ் நகரில் அரங்கேறவுள்ளது

(அ) நெருப்பு புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
(ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்.
(ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்தல்.
(உ) 35கிலோஎடையுள்ளஇரும்புக்குண்டினை 7அடிஉயரத்திலிருந்து வயிற்றில்ஏந்துதல்.
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின்மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
(எ) (3''200 ஆணி) அடிக்கப்பட்ட படுக்கை மீது படுக்க வைத்து மார்பு மேலாக பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
(ஏ) துரைரெத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

2. மோகன்மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டிவிளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

வீரதீரச் செயல்களில் பங்கு பற்றும் கழகங்கள்

1) பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம்
2) வல்வை உடல் பயிற்சி நிலையம்.
3) இன்பருட்டி காண்டீபன் விளையாட்டுக் கழகம்.
4) பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.
5) கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம்.
6) பருத்தித்துறை உடல் பயிற்சி நிலையம். (ஜிம்நாசியம்)

''நோயற்ற வாழ்வுக்கு பெரிதும் துணை நிற்பது'' என்ற தலைப்பில் பட்டிமன்றம்

1) நவீன மருந்துகளா என வாதிடுபவர்கள் இரா. செல்வவடிவேல் ஆறு. திருமுருகன்
2) மருத்துவர்களின் சேவையா என வாதிடுபவர்கள் த. சிவகுமாரன் க. குமாரதயாபரன்
3) சுகாதாரம் பேணுதலா என வாதிடுபவர்கள் தி. திருநந்தகுமார் வ. ஸ்ரீபிரசாந்தன்

நடுவர்: இ. ஜெயராஜ்

### டிக்கெற் கிடைக்குமிடம்:

| | |
|---|---|
| ''வெஸ்கோ'' | ஆஸ்பத்திரி வீதி, யாழ். |
| ''குறிஞ்சி'' | திருநெல்வேலி சந்தை |
| ''நாதன் மருந்தகம்'' | கல்வியங்காடு |
| ''தாவடி மெடிக்கல்ஸ்'' | கோண்டாவில் |
| ''மெடிஇஸ்குயர்ஸ்'' | மானிப்பாய் |
| ''மெடிப்பிளஸ்'' | சங்கானை |
| ஸ்ரீமுருகன் | நெல்லியடி பருத்தித்துறை |
| ''அம்பாள் பாமசி'' | சாவகச்சேரி |

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கியகுறிப்பு: யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். சிரமத்துக்கு மன்னிக்கவும்.

நன்றி.

(சி/7714)

**வ. யா. ஆ. ம. வ. சங்கம்**

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

உதை பந்தாட்டத்தில் இடைவரவு விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1993 நவம்பர் 18ஆம்திகதி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

கொடுப்பனவு விகிதம்:
மணித்தியாலத்திற்கு 75/-ரூபா
(மாதமொன்றிற்கான உச்ச அளவு 900/- ரூபா)

நிதிக்கிளையில் 20/-ரூபாவைச் செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவத்தையும் இதர விபரங்களையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும். படிவங்களையும் இதர விபரங்களையும் தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23×10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடிதஉறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்களிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்பப்படாதவிண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவில்லாதவாறு விபரங்கள் அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்

குறிப்பு: சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-10-07

(சி/7710)

---

படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின்போது கொல்லப்பட்ட தம்பதிகளான இளைப்பாறிய நீர்ப்பாசன அதிகாரி, இளைப்பாறிய ஆசிரியை, இவர்களின் மகனான பல்கலைக்கழக வைத்தியபீட மாணவன், மற்றும் இரு மாணவிகள் உட்பட 52 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அம்பாறை - கல்முனை, நற்பிட்டிமுனைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கிருபை** [கணபதிப்பிள்ளை கிருபைராசா - கரடியனாறு-மட்டு]

கிளிநொச்சி - தர்மபுரம் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கடாபி** (இராமலிங்கம் இரவீந்திரன் - இல. 254, தர்மபுரம், பரந்தன் - கிளிநொச்சி)

மட்டு - பெரியகல்லாறுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1989ஆம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

வவுனியா - மாமடுப் பகுதியில் ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளமருதங்குளத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு, வவுனியா முகாமில் வைத்து அடித்துக் கொல்லப்பட்ட மாறம்பைக் குளத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரின் போது விழுப்புண் அடைந்து யாழ் - மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய-

**லெப் யோகா** (யசோதாதேவி கறுப்பையா - தோப்பூர், மூதூர் - திருமலை)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சாள்ஸ்** ( — செல்வேந்திரன் - மட்டுவில் - சாவகச்சேரி - யாழ்)

மணலாறு - கொக்குத்தொடுவாய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சந்துரு** (கணபதிப்பிள்ளை குலேந்திரன் - தம்பிலுவில் - அம்பாறை)
**மேஜர் டிசான்** (கந்தப்போடி இலங்கநாதன் - ஏறாவூர் - மட்டு)
**லெப். காந்தி** (செல்லத்தம்பி ராஜன் - வாழைச்சேனை- மட்டு)
**லெப். கோவலன்** (சின்னத்தம்பி மனோகரன் - மன்னம்பிட்டி - மட்டு)
**2-ம் லெப். சாஸ்திரி** (அந்தோனி சந்திரதாஸ் - பெரிய உப்போடை - மட்டு)
**கிறிஸ்ரி** (சின்னவேல் சிவகுமார் - புல்லுமலை - மட்டு)
**மதன்** (தியாகராசா தங்கராசா - களுதாவளை, களுவாஞ்சிக்குடி - மட்டு)
**லெப். வசந்தன்** (நடராசா ரவீந்திரன் - மன்னார் வீதி- வவுனியா)
**2 ம் லெப். நிசாந்தன்** (நாகநாதன் புலேந்திரன் - பாண்டியன்குளம் - வவுனிக்குளம்)
**லெப். நீவன்/சதீஸ்** (மயில்வாகனம் சேதுலிங்கம் - புதுவளவு - வல்வெட்டித்துறை)
**2-ம் லெப் கோபி** (கனகரத்தினம் சிவகுமார்- கட்டுடை, மனிப்பாய் மேற்கு - யாழ்)
**மதி** (மோகனாம்பிகை அருளம்பலம் - பத்தானைக்கேணியடி, மூளாய் - யாழ்)
**காசிம்** (அப்புத்துரை பத்மநாதன் - பண்டத்தரிப்பு-யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/7713)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

சரியானது எது என்று தெரிந்தும் அதைச் செய்யாதிருப்பது துணிவுக் குறைவினால் தான்

-கன்ஃபூசியஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 16-10-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023

த. பெ. எண் - 05

# சிறிமாவின் தடுமாற்றம்

தேசிய இனங்களின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது. அரசியற் தீர்வே காணப்பட வேண்டும் என்ற நிதர்சன நிலையை உலகில் இன்று அநேகர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இருப்பினும் இதனை சிறிலங்கா அரசாங்கம் ஏற்பதாக இல்லை. இராணுவத் தீர்வே ஒரே வழி என்ற முடிவில் செயற்பட்டு வருகின்றது. ஆனால், அண்மைக்காலமாக சிறிலங்கா எதிர்க் கட்சித் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கா இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும், இராணுவத் தீர்வு காண முடியாது எனப் பேசிவருகின்றார்.

''வடக்கு - கிழக்கில் உள்ள பிரச்சினைக்கு யுத்தத்தினால் வெற்றி கொள்ள முடியாது; அப்படி யுத்தத்தினால் வெற்றி கொள்ள நினைத்தால் இராணுவத்தினரினதும், பொலிசாரினதும், ஏனைய பாதுகாப்பு படையினரின் உயிர்களை இழக்க வேண்டி வருமே தவிர வெற்றி கொள்ள முடியாது'' என்பதே சிறிமாவோவின் தற்போதைய அறிவிப்பாகவுள்ளது.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இந்த அறிவிப்புக்கள் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என்பதை அவர் நன்கு உணர்ந்து மேற்கொள்ளப்பட்டதா? அல்லது, தற்போதைய நிலையில் சமாதானம் பற்றிப் பேசினால், யுத்தத்தில் சலிப்படைந்து போயுள்ளவர்களிடம் இருந்து ஆதரவைப் பெற்றுக் கொள்ளலாம். அடுத்த தேர்தலில் வாக்கு வேட்டைக்கு இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற திட்டமா?

ஆனால், சிறிமாவோ பண்டாரநாயக்கா எந்த அர்த்தத்தில் கூறியிருந்தாலும் அவர் கூறியிருப்பதில் உண்மையுண்டு. அதாவது, யுத்தத்தினால் வெற்றி கொள்ள நினைத்தால் உயிர்கள் இழக்கப்பட்டே ஆக வேண்டும். அதாவது, 'ஐலண்ட்' பத்திரிகை கூறியிருப்பது போல் துப்பாக்கிகள் முழங்கிக் கொண்டு இருக்கும் வரை பத்திரிகைகளில் மரண அறிவித்தல்களும் நீண்டு கொண்டே செல்லும். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. யுத்தத்தை நடத்தியே தீருவதென்ற முடிவில் செயற்படுகின்றது. அதற்கென நாட்டையே இராணுவ மயமாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இந்த வகையில் மேலும் இராணுவ படையணிகளை உருவாக்குவதிலும், ஆயுதக் கொள்வனவு செய்வதிலும்

சீமேந்து கட்டிட தொழிலாளர்

## வறுமை நிவாரணம் கோரி அரச அதிபரிடம் மகஜர்

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட சீமெந்து கட்டட தொழிலாளர் சங்க ஊழியர்கள் தமக்கு வறுமை நிவாரணம் வழங்கக் கோரி யாழ் அரசாங்க அதிபர், திட்டமிடல், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர், தொழிற்சங்கப் பொறுப்பாளர், தொழிற்சங்கஇணைப் பாளர் அரசியல்துறை ஆகியோருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இவ்வாறு மேற்படி சங்கத்தினால் அண்மையில்கையளிக்கப் பட்ட மகஜர்விபரம்வருமாறு:

சீமெந்து கட்டட தொழிலாளர்கள் இன்று தொழில் இழந்த நிலையில் தமது குடும்ப ஜீவனோபாயத்தை மிகவும்கஷ்டப்பட்டேநடாத்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள். தங்கள் காருண்ய சிந்தையுடன்வழங்கி வந்த நிவாரணம் கடந்த பல மாதங்களாய் வழங்காமல் தடைப்பட்டமையினால் இத் தொழிலாளர் குடும்பங்கள் மிக மனவேதனையுடன் தங்களது நிலைப்பாட்டினை எமது சங்கக்கிளைகள் மூலமாய் எமக்கு அறியத்தந்துள்ளார்கள் நாம் எமது தலைமைச்சங்க மூலமாய் ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக அங்கத்துவ கையேடுகளை மீள் பரிசீலனை செய்து அவர்களின் துயர்களை நேரில் பார்த்து அறிந்து கொண்டோம். மாதாந்த நிவாரணம் இவர்களுக்கு ஆறுதலைக் கொடுத்துள்ளமையினை நேரில் சென்று கலந்துரையாடிய போது அறியக்கூடியதாய் இருந்தது என்பதனை நாம் உறுதிப்படுத்துகின்றோம். இது விடயமாக கிளைகளின் அங்கத்தவர்கள் உதவி அரச அதிபர்களுக்கு ஏற்கனவே மகஜர்களை கையளித்தமையினை தாங்கள் அறிந்திருப்பீர்கள் எனக் கருதுகின்றோம். இத் தொழிலாளர்களின் மனிதாபிமான கோரிக்கைக்கு செவிமடுத்து வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவியை தொடர்ந்தும் வழங்க ஆவன செய்வீர்களென கேட்டுக் கொள்கிறோம்.

## கலைப் பட்டப்படிப்பு நூல் மாநகரசபை கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை நூலகத்திற்கு கலைப்பட்டப் படிப்புக் குத் தேவையான நூல்களைக் கொள்வனவு செய்ய முயற்சிகள் நடைபெற்று வருவதாக யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கமைய யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் யாழ். மாநகரசபை ஆணையாளரைச் சந்தித்து இது தொடர்பாக கலந்தாலோசனை நடாத்தியுள்ளார்.

இச் சந்திப்பில் யாழ். மாநகரசபை நூலகத்திற்கு கலைப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு தேவையான நூல்களைக் கொள்வனவு செய்து வைக்கும்படி கேட்கப்பட்ட இடத்து அதற்கான புத்தகங்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலைத் தந்தால் தான் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

